**தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை**

**அருள்தரும் முத்தாரம்மன் திருக்கோயில் குலசேகரன்பட்டினம்**

**திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்**

**வேலைவாய்ப்பு அறிவிப்பு நாள்:-10.07.2023**

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், குலசேகரன்பட்டினம் அருள்தரும் முத்தாரம்மன் திருக்கோயில் கீழே குறிப்பிடப்பட்ட பணியிடங்களுக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்து பணி நியமனம் செய்ய இந்து மதத்தினை சேர்ந்த தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து நிபந்தனைகளுக்குட்பட்டு 11.08.2023 மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன .

**விண்ணப்பிக்கும் விபரம் மற்றும் இதர போதுமான தகுதிகள்**

1. விண்ணப்பதாரர்கள் இந்து மதத்தினை சார்ந்தவராக இருக்க வேண்டும்.
2. கல்வித் தகுதி, கூடுதல் தகுதி பிறந்த தேதி மற்றும் முன் அனுபவத்திற்கான சான்றிடப்பட்ட நகல் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்
3. அனைத்து பணியிடத்திற்கும் திருக்கோவிலில் ஏற்கனவே பணிபுரிந்த முன் அனுபவம் இருப்பின் அது கூடுதல் தகுதியாக கருதப்படும்.ஆனால் உரிமையாக கருதலாகாது .
4. விண்ணப்பதாரர்கள் 2023 ஜீலை 1 அன்று 18 வயது பூர்த்தியானவராகவும் ,35 வயது பூர்த்தியடையாதவராகவும் இருக்க வேண்டும்.
5. நீதிமன்றத்தில் தண்டனை அடைந்தவர்கள் ,நன்னடைத்தைக்காகவோ அல்லது அமைதியை காப்பற்றவோ ஜாமீனில் கட்டுப்படுத்தப்பட்டவர்கள் ,பட்ட கடனை தீர்க்க முடியவில்லை என நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்டவர்கள் ,அரசு பணியிலிருந்தும், இதர நிறுவனங்களிலிருந்தும் ,திருக்கோவில்கள் இருந்தும் விலக்கப்பட்டவர்கள் ,புத்தி சுவாதினமற்றவர்கள் , திருக்கோவிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் மற்றும் அவரது வாரிசுதாரர்கள் போன்றோர் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள்.
6. திருக்கோவில் பணியாளர் பணியிடத்திற்கு திருக்கோவிலின் புனிதத்தன்மை பாரம்பரியம் , நடைமுறை பழக்க வழக்கங்களுக்கு உட்பட்டு நல்லொழுக்கம் உள்ளவர்கள் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.புகை பிடித்தல் ,லாகிரி வஸ்துக்கள் உபயோகிப்பவர்கள் ,மது அருந்துபவர்கள் உள்ளிட்டோர் தகுதியற்றவர்கள் ஆவார்.
7. இந்த விளம்பர அறிவிப்பினில் குறிப்பிட்ட கடைசி தேதிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் , விண்ணப்பத்தில் உரிய பட்டியலில் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் , கோரப்பட்ட சான்றுகள் இணைக்கப்படாமல் வரப்பெறும் விண்ணப்பங்கள் ,எவ்வித பரிசீலனைக்கும் எடுத்துக் கொள்ளப்படமட்டாது. நிராகரிக்கப்படும்.

8. விண்ணப்பதாரர்கள் தாங்கள் கடைசியாக பயின்ற கல்வி நிறுவனத்திலிருந்து பெற்ற சான்றிதழ்களை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
9. விண்ணப்பங்கள் பரிசீலித்து தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்காணலுக்கான அழைப்பு அனுப்பப்படும் . அதுசமயம் , விண்ணப்பதாரர்கள் நேர்காணல் நடைபெறும் நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னதாக ,உரிய அசல் சான்றிதழ்களுடன் தனது சொந்த செலவில் நேரில் ஆஜராக வேண்டும் .
10. விண்ணப்பதாரர்கள் அளிக்கப்படும் சான்றுகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறைகளின் பரிசீலனைக்கு ஆய்வுக்கு உட்படுத்தப்படும்.
11. தேர்வு செய்யப்படும் நபர்கள்,காவல் துறையின் மூலம் குற்றவியல் நடவடிக்கைகளில் சம்பந்தபட்டவரா என்பது போன்ற விபரங்கள் அறிந்த பின்னால் சென்னை ,இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அங்கீகாரத்திற்கு பின்பே பணி நியமனம் செய்யப்படுவர்.
12. தேர்வு செய்யப்படும் நபர்கள், தமிழ் நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை சட்ட விதிகளுக்கு உட்பட்டும் திருக்கோவிலில் தொன்று தொட்டு வரும் பழக்க வழக்கங்கள் நடைமுறைகள் மற்றும் நிர்வாகத்தில் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற உத்தரவுகளுக்கு உட்பட்டும் ,பணி செய்ய கடமைப்பட்டவர்கள் ஆவர்.
13. தேர்வு செய்யப்படும் நபர்கள் தான் அளிக்கும் விபரங்கள் அனைத்தும் சரியானவை என உறுதி அளிக்க வேண்டும் , தவறான தகவல்கள் அல்லது போலியான ஆவணங்கள் ஏதேனும் அளித்து பணி நியமன ஆணை பெறப்படும் பட்சத்தில், எவ்வித முன் அறிவிப்பு இன்றி பணி நீக்கம் செய்யப்படுவர்.மேலும் குற்றவியல் நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படுவர்.
14. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் செயல் அலுவலர், அருள்தரும் முத்தாரம்மன் திருக்கோயில், குலசேகரன்பட்டினம், திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம், என்ற முகவரிக்கு 11.08.2023 அன்று மாலை 5.45க்குள் கிடைத்திடும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும்
15. நேர்முக தேர்வில் தேர்ந்தெடுக்கபடும் நபர்களை எவ்வித காரணமும் கூறது நிராகரிக்க திருக்கோவில் நிர்வாகத்திற்கு உரிமை உண்டு .
16. நிர்வாக காரணங்களால் மேற்கண்ட அறிவிப்பினை மாற்றம் செய்திட திருக்கோவில் நிர்வாகத்திற்கு முழு அதிகாரம் உண்டு .

தக்கார்/உதவி ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை
தூத்துக்குடி

செயல் அலுவலர்
அருள்தரும்முத்தாரம்மன் திருக்கோயில்
குலசேகரன்பட்டினம்

தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத்துறை

**அருள்தரும் முத்தாரம்மன் திருக்கோயில் குலசேகரன்பட்டினம்**

திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்

வேலைவாய்ப்பு அறிவிப்பு நாள்:-10.07.2023

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், குலசேகரன்பட்டினம் அருள்தரும் முத்தாரம்மன் திருக்கோயில் கீழே குறிப்பிடப்பட்ட பணியிடங்களுக்கு தகுதியான நபர்களை தேர்வு செய்து பணி நியமனம் செய்ய இந்து மதத்தினை சேர்ந்த தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து நிபந்தனைகளுக்குட்பட்டு 11.08.2023 மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன

| வ.எண் | பணியிட விபரம் | பணியிடத்தின் எண்ணிக்கை | சம்பள விகிதம் |
|---|---|---|---|
| 1. | அர்ச்சகர் (உபகோயில்) | 1 | 11600 – 36800 ( நிலை - 12) |
| 2. | உதவி அர்ச்சகர் – முதன்மை & உபகோயில் | 2 | 13200 – 41800 (நிலை - 14) |
| 3. | நாதஸ்வரம் – முதன்மை & உபகோயில் | 1 | 15300 – 48700 (நிலை - 15) |
| 4. | தவில் – முதன்மை & உபகோயில் | 1 | 15300 – 48700 (நிலை - 15) |
| 5. | மடப்பள்ளி/ பரிசாரகர் உபகோயில் | 2 | 13200 – 41800 (நிலை - 14) |
| 6. | ஓதுவார் – முதன்மை & உபகோயில் | 1 | 12600 –39900 (நிலை - 13) |
| 7. | உதவி பரிசாரகர் – முதன்மை & உபகோயில் | 1 | 12600 –39900 (நிலை - 13)) |
| 8. | இரவு காவலர் – முதன்மை & உபகோயில் | 6 | 11600 – 36800 (நிலை - 12) |
| 9. | பகல் காவலர் – முதன்மை & உபகோயில் | 5 | 11600 – 36800 (நிலை - 12) |
| 10. | திருவலகு – முதன்மை & உபகோயில் | 4 | 10000 – 31500 (நிலை - 13) |

| | | | |
|---|---|---|---|
| | | | |
| 11. | மின் பணியாளர் – முதன்மை & உபகோயில் | 1 | 12600 –39900 (நிலை - 13) |
| 12. | அலுவலக உதவியாளர் – முதன்மைகோயில் | 1 | 12600 –39900 (நிலை - 13) |

1. விண்ணப்பதாரர்கள் 2023 ஜீலை 1 அன்று 18 வயது பூர்த்தியானவராகவும் ,35 வயது பூர்த்தியடையாதவராகவும் இருக்க வேண்டும்.இதர விவரங்கள் அலுவலக நாட்களில் அலுவலக நேரத்தில் நேரில் வந்து தெரிந்து கொள்ளவேண்டும்
2. விண்ணப்பங்கள் திருக்கோவில் அலுவலத்தில் நேரிலோ அல்லது https://hrce.tn.gov.in என்ற இணையதளத்தில் அருள்தரும் முத்தாரம்மன் திருக்கோவில் என்கிற பெயரில் உள்ள பக்கத்தில் ஆன்லைன் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் .
3. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் செயல் அலுவலர், அருள்தரும் முத்தாரம்மன் திருக்கோயில், குலசேகரன்பட்டினம், திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம், என்ற முகவரிக்கு 11.08.2023 அன்று மாலை 5.45க்குள் கிடைத்திடும் வகையில் அனுப்பி வைக்க வேண்டும் விளம்பர அறிவிப்பினில் குறிப்பிட்ட கடைசி தேதிக்கு பின்னர் வரப்பெறும் விண்ணப்பங்கள் , விண்ணப்பத்தில் உரிய பட்டியலில் முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் , கோரப்பட்ட சான்றுகள் இணைக்கப்படாமல் வரப்பெறும் விண்ணப்பங்கள் ,எவ்வித பரிசீலனைக்கும் எடுத்துக் கொள்ளப்படமட்டாது. நிராகரிக்கப்படும்.

**தக்கார்/உதவி ஆணையர்**
**இந்து சமய அறநிலையத்துறை**
**தூத்துக்குடி**

**செயல் அலுவலர்**
**அருள்தரும்முத்தாரம்மன் திருக்கோயில்**
**குலசேகரன்பட்டினம்**



**அருள்தரும் முத்தாரம்மன் திருக்கோயில்**

**குலசேகரன்பட்டினம்**

**திருச்செந்தூர் வட்டம், தூத்துக்குடி மாவட்டம்**

மின் அஞ்சல் : gnanamutharamman@gmail.com போன் : 04639- 250355

**விண்ணப்பப்படிவம்**

| | | |
|---|---|---|
| 1. | பெயர் | |
| 2. | தந்தை பெயர் | |
| 3. | தற்போதைய முகவரி(சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 4. | நிலையான முகவரி | |
| 5. | தொலைபேசி எண் | |
| 6. | ஆதார் எண் ( நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 7. | மதம் மற்றும் வகுப்பு (சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 8. | பிறந்த தேதி மற்றும் வயது(சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 9. | கல்வி தகுதி(சான்றிதழ் நகல் இணைக்கப்பட வேண்டும்) | |
| 10. | முன் அனுபவம் | |
| 11. | நன்னடத்தை சான்று அளித்தவர் பெயர் ,பதவி விபரம் (நன்னடத்தை சான்று அலுவலக முத்திரையுடன் இணைக்கப்பட வேண்டும் ) | |
| 12. | பணி தொடர்பான குறிப்பான தகவல் | |
| 13. | குற்றவியல் நடவடிக்கைகள் ஏதுமில்லை என காவல் துறையினரால் வழங்கப்பட்ட நன்னடத்தை சான்று இணைக்கப்பட வேண்டும் | |

மேற்குறித்த விவரங்கள் அனைத்தும் உண்மையானவை எனவும் , விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள் தகுதிகளை பெற்றுள்ளேன் எனவும் உறுதி அளிக்கிறேன்.

**விண்ணப்பதாரர் கையொப்பம்**